செ.வெ.எண்: 34/மார்ச் நாள்: 20.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடியில் அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வு மணல் சிற்பத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்

## முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, உழவர் சந்தை அருகே உள்ள சிறுவர் பூங்கா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வு மணல் சிற்பத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.03.2016) நேரில் சென்று பார்வையிட்டார்.

அதன்பின்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சட்டமன்ற பொதுத் தேர்தல்-2016 நாள் அறிவிக்கப்பட்டதைத் தொடாடந்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து பல்வேறு வாக்ககாளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி உழவர் சந்தை அருகே உள்ள சிறுவர் பூங்கா பகுதியில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பொதுமக்களை கவரும் விதமாகவும், வாக்களிப்பதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்திடும் வகையிலும் வாக்காளர் விழிப்புணர்வு மணல் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மணல் சிற்பத்தினை, பரமக்குடியிலுள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றும் சரவணன் மற்றும் குழுவினர் உருவாக்கினார்கள். இந்த மணல் சிற்பம் சிறியவாகள் முதல் பெரியவர்கள் வரையுள்ள அனைவரையும் கவரும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் இது போன்ற பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளின் வாயிலாக, நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல்-2016ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் வாக்குப்பதிவு சதவிதம் அதிகரிக்கும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் வாக்காளர் சேவை மையத்தினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது, வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் பதிவு செய்திட மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் குறித்த விபரங்களை கணினியில் ஆய்வு செய்தார்

இந்த ஆய்வின்போது பரமக்குடி சார் ஆட்சியர் மரு.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., பரமக்குடி வட்டாட்சியர் திரு.செய்யது முகமது உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**